தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2023–2024)

(பதினாறாவது பேரவை)

ஐந்தாவது அறிக்கை

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள் : **10–10–2023**)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை–600 009.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2023–2024)

(பதினாறாவது பேரவை)

ஐந்தாவது அறிக்கை

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை–600 009.

பொருளடக்கம்

பக்கம்

1. 2023–2024 ஆம் ஆண்டிற்கான பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அமைப்பு .. iii

2. முகவுரை .. v

இணைப்பு

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் கீழ்க்கண்ட ஆண்டறிக்கைகள் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படாமல் நிலுவையிலுள்ளது குறித்து அத்துறை அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் பரிந்துரை:– .. 1–9

2019–2020 முதல் 2021–2022 வரையிலான ஆண்டறிக்கைகள் .. 1

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2023–2024)

(பதினாறாவது பேரவை)

(2023 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 21 ஆம் நாள் அமைக்கப்பெற்றது)

தலைவர்

1. மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி

உறுப்பினர்கள்

2. மாண்புமிகு திரு. கி. அசோக்குமார்
3. மாண்புமிகு திரு. T.K. அமுல் கந்தசாமி
4. மாண்புமிகு திரு. ச. அரவிந்த் ரமேஷ்
5. மாண்புமிகு திருமதி கு. சித்ரா
6. மாண்புமிகு திரு. எஸ். தங்கப்பாண்டியன்
7. மாண்புமிகு திரு. S. பழனி நாடார்
8. மாண்புமிகு திரு. K.A. பாண்டியன்
9. மாண்புமிகு திரு. இரா. மாணிக்கம்
10. மாண்புமிகு டாக்டர் A.R.R. ரகுராமன்
11. மாண்புமிகு திருமதி ம. வரலட்சுமி

செயலகம்

முனைவர் கி. சீனிவாசன்	. . .	செயலாளர்
திரு. தே. நாகராஜன்	. . .	கூடுதல் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. வ. பூபாலன்	. . .	இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. கோ. வரதராஜன்	. . .	தலைமை நிருபர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2023–2024)

(பதினாறாவது பேரவை)

ஐந்தாவது அறிக்கை

முகவுரை

2023–2024 ஆம் ஆண்டிற்கான பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவராகிய நான் குழுவின் சார்பாக ஐந்தாவது அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

2023–2024–ஆம் ஆண்டிற்கான பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு 21–04–2023 அன்று அமைக்கப்பெற்றது.

குழுக் கூட்டம்

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் ஆண்டறிக்கைகள் பேரவை முன் **அளிக்கப்பெறாமல் நிலுவையில் உள்ளவை** குறித்து **17–05–2023** அன்று சென்னையில் நடைபெற்ற குழுக்கூட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையைச் சார்ந்த உயர் அலுவலர்கள் விளக்கம் அளித்தனர். குழுமுன் அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் கருத்துரைகள் மற்றும் பரிந்துரைகள் இவ்வறிக்கையின் இணைப்பில் அளிக்கப்பட்டுள்ளன.

9–10–2023 ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்ற குழுக் கூட்டத்தில் இவ்வறிக்கைக்கு குழு தனது ஒப்புதலை அளித்தது.

சென்னை–600 009,
9–10–2023
சோபகிருது–**புரட்டாசி–22**
திருவள்ளுவர் ஆண்டு 2054

ஆ. தமிழரசி
தலைவர்
பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.

இணைப்பு

இணைப்பு

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்

கழகத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவை முன் வைக்கப்பட வேண்டிய கால அளவு	பேரவை முன் வைக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)
தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்	2019–2020	31–03–2021	––	21/2 வருடங்களுக்கு மேல் நிலுவை
	2020–2021	31–03–2022	––	1 1/2 வருடங்களுக்கு மேல் நிலுவை
	2021–2022	31–03–2023	––	6 மாதங்களுக்கு மேல் நிலுவை

துறையின் பதில்
(6)

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் (தாட்கோ) பணியாளர்கள் பற்றாக்குறை உள்ளது. அதனைப் போக்க தமிழ்நாடு பணியாளர்கள் தேர்வாணையத்தின்மூலம் பணியாளர்கள் தேர்வு செய்வதற்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், பிற துறைகளிலிருந்து மாற்றுப் பணியில் பணியாளர்களை வரவழைத்து ஆண்டறிக்கைகள் குறித்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிதியாண்டுக்கான தாட்கோவினுடைய அறிவிப்புகளில் மனித வள கட்டமைப்பை (Human Resource Structure) மறுசீரமைப்பு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் பணியாளர்கள் பற்றாக்குறையைப் போக்க சிறிதளவு வெளியிலிருந்து பணியாளர்கள் தேர்வுசெய்யப்பட்டால் நிலுவையிலுள்ள பணிகள் முடிக்கப்பட்டுவிடும்.

குழுவின் பரிந்துரை
(7)

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் 2019-2020 முதல் 2021-2022 வரையிலான 3 ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படாமல் நிலுவையிலுள்ளமை குறித்து 6-4-2022 அன்று நடைபெற்ற குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு, கடந்த 2022 டிசம்பர் மாதத்திற்குள் சட்டமன்றப் பேரவையில் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று துறையால் அளிக்கப்பட்ட உறுதிமொழிக் காலம் முடிந்து கிட்டதட்ட 5 மாதங்கள் கடந்த பிறகும், சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தொடர் நிறைவுற்ற நிலையில் 3 ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லை. தற்போது குழுக் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இவ்வேளையில் துறை அளித்துள்ள விளக்கக் குறிப்பில் பணியாளர்கள் பற்றாக்குறையே ஆண்டறிக்கைகள் சமர்ப்பிப்பதில் காலதாமதம் ஏற்படுவதற்கான காரணமாகத் தெரிவிக்கப் பட்டுள்ளதை குழுவால் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை.

தாட்கோ நிறுவனத்தில் ஒப்பளிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை 584 இருக்க வேண்டும். ஆனால், தற்போது 408 பணியிடங்கள் காலியாக உள்ளன. ஒவ்வொரு வருடமும் பணியாளர்கள் ஓய்வு பெறுவதால் கடந்த 10 வருடங்களாக இந்நிலை நீடித்து வருகிறது. இதற்கென, தற்காலிகமாக ஊழியர்களைப் பணியமர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின்மூலம் 37 பணியாளர்களை இளநிலை உதவியாளர் மற்றும் உதவியாளர் நிலையில் தேர்வு செய்து அளிக்குமாறு கோரப்பட்டுள்ளது. தேர்வு முடிவுகள் வெளியான உடனே இளநிலை உதவியாளர் பணியிடங்கள் முழுவதும் நிரப்பப்பட்டுவிடும்.

பணியாளர்கள் பற்றாக்குறை எல்லா துறைகளிலும் இருக்கக்கூடிய ஒன்றாகும். இதனால், மக்களுக்குச் செல்லக்கூடிய நலத் திட்டங்கள் பாதிக்கப்படக் கூடாது. நலத் திட்டங்களின் ஆக்கப்பூர்வமான செயல்பாடுகள் சட்டமன்றப் பேரவையில் ஆண்டறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுவதன் மூலமாகத்தான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது. ஆண்டறிக்கைகள் உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாததால் செயல்படுத்தப்படும் நலத்திட்ட செயல்பாடுகளின் நிலை தெரிவிக்கப்படாததால், தாட்கோ நிறுவனம் பெற்றுள்ள நிதியின் பயன்பாடுகள் குறித்த விவரம் அறிந்துகொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இது ஒரு பெரிய துறை. பட்டியலின மக்களுக்கு சேவையளிக்கும் ஒரு துறை. ஆனால், 584 பணியாளர்களில் சுமார் 400 பணியாளர்களின் பணியிடங்கள் காலியாக உள்ளது என்றால் எப்படி இந்த நிறுவனம் செயல்படுகிறது? தற்போது, 400 காலிப் பணியிடங்களுக்கு 37 இளநிலை உதவியாளர்கள் தான் தேர்வு செய்யப்போகிறீர்கள். அந்த 37 பணியாளர்களும் எப்படி பணி செய்வார்கள் என்பது தெரியாது.

தாட்கோவில் புதியதாகப் பொறுப்பேற்றுள்ள கம்பெனி செயலாளர் அவர்கள் எல்லா கணக்குகளையும் ஆய்வு செய்து வருகிறார்கள்.

ஆரம்ப கணக்கை இறுதி செய்த பிறகு சட்டப் படிக்கான தணிக்கைக்கு தலைமை கணக்காளருக்கு அனுப்பப்படுகிறது. அதன்பிறகு தலைமை கணக்குத் தணிக்கையாளரின் கருத்துருவிற்காக அனுப்பப்படுகிறது. அவர் 3 மாத கால அளவில் தனது கருத்துருக்களை அளித்துள்ளார். அவரின் கருத்துருவிற்கு பதிலளிப்பதற்குத்தான் தாட்கோவிற்கு காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

2019–2020–க்கான ஆண்டுக் கணக்குகள் தலைமை கணக்குத் தணிக்கையாளரால் இறுதி செய்யப்பட்டு டிசம்பர் 2022 இல் வந்தது, அதன்பின்னர் வருடாரந்திர பொதுக்குழுக் கூட்டத்தில் 2023 இல் தான் வைக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. 2019–2020–க்கான அறிக்கை தற்போது மொழிபெயர்ப்புப் பணியில் இருந்து வருகிறது. இந்நிலையில், 2019–2020 ஆம் ஆண்டுக்கான கணக்கு இறுதி செய்யப்பட்டதை வைத்துக் கொண்டு, 2020–2021 மற்றும் 2021–2022 ஆகிய ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கை தணிக்கை செய்யப்பட்டு தயார் நிலையில் உள்ளது. பொதுவாக முந்தைய ஆண்டின் கணக்கின் இறுதி நிலுவையை வைத்துத்தான் வரும் ஆண்டுக்கான கணக்கினை தயார் செய்யக்கூடிய கணக்கீடு முறையானது தாட்கோ நிறுவனத்தில் ஒரு மரபு ரீதியான கண்ணோட்டமாக இருந்து வருகிறது.

துறைத் தலைவர் அவர்கள் தாட்கோவின் மேலாண்மை இயக்குநருடன் கலந்தாலோசித்து ஆண்டறிக்கைகளை விரைவில் சமர்ப்பிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். புதியதாக பணி நியமனம் பெறவிருக்கும் 37 பணியாளர்களால் உடனடியாக ஆண்டறிக்கைகளை தயாரிக்க இயலாது. எனவே, துறை உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டால்தான் ஒவ்வோர் ஆண்டும் பேரவையில் ஆண்டறிக்கைகளை வைக்க முடியும்.

இனிவருங்காலங்களில், போதிய ஊழியர்கள் இல்லையென்றாலும்கூட ஆண்டறிக்கைகள் சமர்ப்பிக்கும் பணிகள் தாமதமாகாது.

தாட்கோவின் செயல்பாடுகள் மற்ற துறைகளில் உள்ளவை போன்று அல்ல. தாட்கோவைப் பொறுத்த வரை, ஆண்டுக் கணக்கை இறுதி செய்யும் நேரத்தில், முழுமையாக இறுதி செய்ய முடியாது. காரணம், மார்ச் 31 வரை தாட்கோவில் நிதி இருப்பு இருக்கும். ஏனெனில், பயனாளிகள் சம்மதக் கடிதம் கொடுக்காமல் வைத்திருப்பதாலும், சம்மதக் கடிதம் கொடுத்த பிறகு மானியத் தொகை விடுவிப்பு செய்த நிலையிலும், பயனாளிகளுக்கு தொகை சென்று சேராமல் வங்கியில் நிலுவையில் இருக்கும். இந்நிலையில், கணக்குகள் இறுதி செய்ய முடியாத நிலை இருக்கும். இவ்வாறு பலவாறான நடைமுறைச் சிக்கல்கள் கணக்கை இறுதி செய்வதில் ஏற்படுகின்றன.

குழுவின் ஆலோசனையைக் கருத்தில்கொண்டு, குறிப்பிட்ட காலத்தில் கணக்குகளை முடித்து ஆண்டறிக்கையை முறையாக வைப்பதை துறை நோக்கமாக கொள்வதோடு, இனி வருங்காலங்களில் காலதாமதம் நேரா வண்ணம் துறை கவனித்துக் கொள்ளும்.

இனிவருங்காலங்களில், இணைய வழியின் மூலமாக விண்ணப்பங்கள் பெறும் முறை அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

தற்போது, இணையவழி நவீன நடவடிக்கைகள் பின்பற்றப்படுவதால், அனைத்து விவரங்களையும் எப்போது வேண்டுமானாலும் பெற முடியும்.

குழு தெரிவித்துள்ள கருத்துகள் அனைத்தும் சரியானவையென துறை ஏற்றுக்கொள்கிறது. தாட்கோ நிறுவனத்தின் திட்டங்களில் அனைத்து பரிவர்த்தனைகளும் வங்கிகள்மூலம் பயனாளிகளுக்கு என்னும் இணையவழி (Online Transaction to the Individual through Bank) மூலமாக நடைபெறுகின்றன.

பயனாளிகளுக்கான தொகையானது நேரடியாக அவரவர்களின் வங்கிக் கணக்குகளில் சென்று சேர்க்கப்படுவதுடன், விவரங்களை எப்போது வேண்டுமானாலும் இணையவழிமூலம் பார்த்துக்கொள்ளக்கூடிய வழிவகை உள்ளது. ஒன்றிய அரசின் நிதி வருவதற்கு காலதாமதமானாலும் பயனாளிகளுக்கு எவ்வித சிரமமும் இருக்கக்கூடாது என்பதற்காக சில நேர்வுகளில் தாட்கோ நிறுவனம் தனது சேமிப்பிலிருந்து நிதியினை செலவு செய்து வருகிறது.

ஓராண்டில் மார்ச் 31 ஆம் தேதி முடிவடைந்த கணக்குகளை அன்றைக்கே அறிந்துகொள்ளக்கூடிய வகையில் தொழில்நுட்பங்கள் வளர்ந்துவிட்ட சூழ்நிலையில், தாட்கோவின் கணக்குகளை மூன்று மாதங்களுக்கொருமுறை சரிபார்ப்பு செய்வதன்மூலம் இறுதிக் கையிருப்பு, ஆரம்பக் கையிருப்பு போன்ற இனங்களை இறுதி செய்வதில் காலதாமதம் ஏற்படாது என்று குழு கருதுகிறது.

தாட்கோ நிருவாகத்தில் கணக்குகளை இறுதி செய்வதில் தாமதமாவதற்கு பணியாளர்கள் பற்றாக்குறையை காரணமாக சொல்லியிருப்பது தவறு என்று குழு சுட்டிக்காட்டி இருப்பது ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

உள் தணிக்கை செய்வதற்கு நியமிக்கப்படும் கணக்கு தணிக்கையாளர் தற்காலிகமாக தாட்கோவின் மூலம் நியமிக்கப்படுகிறார். அதன்பிறகு உள்கணக்கு தணிக்கையாளர் செய்த தணிக்கையில் சட்டப்படிக்கான தணிக்கை செய்த பிறகு தலைமை கணக்காயர் மூலமாக தணிக்கை செய்யப்படுகிறது. இத்தகு நடவடிக்கைகளால் ஏற்படும் காலதாமதம் இனிவருங்காலங்களில் நிகழாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பல வருடங்களாக ஆண்டறிக்கைகள் சமர்ப்பிப்பதில் ஏற்படும் காலதாமதத்திற்கு காரணமாக பணியாளர்கள் பற்றாக்குறையே குறிப்பிடப்படுகிறது. தற்போது 60 சதவீதத்திற்கு மேல் பணியாளர்கள் பற்றாக்குறை இருப்பதாகவும், குறிப்பாக கோட்டக் கணக்கர் என்ற பதவி 10 ஆண்டுகளாக காலியாகவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தாட்கோவில் பணியாளர்கள் நியமனம் பொதுவாக வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாகவும் அல்லது நேரடி நியமனம் மூலமாகவும் செய்யப்பட்டு வந்தநிலையில் 2022–லிருந்து காலிப் பணியிடங்களை அரசு பணியாளர் தேர்வாணையம் மூலமாக மட்டுமே நிரப்பப்பட வேண்டும் என்ற சட்டம் கொண்டுவந்ததன் அடிப்படையில் தற்போதுள்ள 37 பணியிடங்கள் தேர்வாணையம்மூலம் நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கணக்குகளை உள் தணிக்கை செய்வதற்கு கணக்கு தணிக்கையாளரை வெளியிலிருந்து தற்காலிகமாக நியமனம் செய்யும் நேர்வில், பணிகளைச் செய்வதற்கும் 10 நபர்களுக்குப் பதிலாக 20 நபர்களை வெளியிலிருந்து தற்காலிகமாக நியமனம் செய்தால் அவ்வாண்டுக்கான பணிகளை அவ்வாண்டிலேயே விரைந்து முடிக்க முடிவதோடு, ஒவ்வோராண்டும் ஆண்டறிக்கைகளை சமர்ப்பிப்பதில் காலதாமதம் ஏற்படுவதற்கு வாய்ப்பும் இருக்காது என்று குழு கருதுகிறது.

2019-2020 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை தொடர்பான பணி முடிந்துவிட்டது. 2020-2021 மற்றும் 2021-2022 ஆம் ஆண்டுக்களுக்கான ஆண்டறிக்கைகளை ஜனவரி 2024-ல் முடித்து ஏப்ரல் 2024-ல் சமர்ப்பித்துவிடுகிறோம்.

குழுவின் அறிவுறுத்தல்களின்படி, மாண்புமிகு துறை அமைச்சர் அவர்களின் ஒப்புதலுடன் கூடிய தாமதத்திற்கான அறிக்கையுடன் எதிர்வரும் சட்டமன்றக் கூட்டத்தொடர் நாட்களில் ஆண்டறிக்கைகளை சமர்ப்பிக்க நடடிவக்கை எடுக்கிறோம்.

பணியாளர்கள் பற்றாக்குறையைப் போக்க வெளிநிறுவனங்களின்மூலம் பணியாளர்கள் நியமனம் செய்துகொள்ள வழிவகைகள் இருப்பதால், அரசிடமிருந்து அனுமதி பெற்று நியமனம் செய்து பணிகளை மேற்கொண்டிருந்தால், இத்தகைய காலதாமதங்கள் ஏற்பட்டிருக்காது என்று குழு கருதுகிறது.

மேலாண்மை இயக்குநர் அவர்கள் மிகச் சிறப்பாக நிறுவனத்தின் நடவடிக்கைகளை கூர்ந்தாய்வு செய்திருப்பது குழுவிற்கு மகிழ்ச்சி அளிப்பதோடு, அவரது பணிக்காலத்தில் இவ்வாண்டு அறிக்கைகள் நிலுவையில்லாமல் அனைத்தும் சட்டமன்றப் பேரவையின்முன் வைக்கப்பட்டுவிட்டன என்ற வகையில் அவரது செயல்பாடுகள் இருக்குமானால் குழுவிற்கு மிகுந்த திருப்திகரமாக இருக்கும். அத்துடன், நிலுவையிலுள்ள ஆண்டறிக்கைகள் வரும் டிசம்பர் 2023 அல்லது ஜனவரி 2024 மாதத்திற்குள் வைக்கப்பட்டுவிடுமானால் குழுவின் பாராட்டுதலுக்குரியதாக அமையும்.

அரசுச் செயலாளர் அவர்களும், தாட்கோ மேலாண்மை இயக்குநர் அவர்களும் கூடுதல் கவனம் செலுத்தி, விரைவில் ஆண்டறிக்கைகளை அடுத்த சட்டமன்றக் கூட்டத் தொடர் ஆரம்பிக்கும்பொழுது 2019-2020 முதல் 2021-2022 வரையிலான 3 வருட ஆண்டறிக்கைகளை சமர்ப்பிக்க உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென குழு கேட்டுக்கொள்கிறது.

அத்துடன், காலதாமதமாக சமர்ப்பிக்கப்படும் ஆண்டறிக்கைகள் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படும் நேர்வில், மாண்புமிகு துறை அமைச்சர் அவர்களின் ஒப்புதலுடன் கூடிய காலதாமதத்திற்கான அறிக்கையை (Delay Statement) தவறாமல் இடம்பெற்றிருக்கும் வகையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என குழுக் கேட்டுக்கொள்கிறது.



முனைவர் கி. சீனிவாசன்,
செயலாளர்.